بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

‘‘இப்போது வானத்தின் கீழ் ஒரேயொரு நபி மட்டுமே இருக்கிறார்கள். ஒரேயொரு வேதம் மட்டுமே உள்ளது. ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களை விடவும் உயரிய மேன்மையானவரும், எல்லா ரஸூல்மார்களை விடவும் முழுமையையும் நிறைவையும் பொருந்தியவரும், காத்தமுல் அன்பியாவும், மனிதர்களில் சிறந்தவரும் ஆவார்கள். அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் இறைவன் கிடைக்கிறான்; இருளின் திரை விலகுகிறது. இவ்வுலகில் உண்மை ஈடேற்றத்தின் அறிகுறிகள் தென்படத் தொடங்குகின்றன.’’

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களைவலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 18.12.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹ் என்று வாதம் செய்ததிலிருந்து இன்று வரை அஹ்மதிய்யத்தின் எதிரிகள் – பெயர்தாங்கி ஆலிம்கள் அன்னார் மீது பல ஆட்சேபனைகளைக் கூறி வருகிறார்கள். அபாண்டங்களைச் சுமத்தி வருகிறார்கள். அவற்றுள் மிகப் பெரிய ஓர் அபாண்டப் பழியாகவும் முஸ்லிம்களை ஆவேசம் கொள்ளச் செய்வதுமாக விளங்குவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தம்மை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட பெரியவராகக் கருதுகிறார்கள் என்பதாகும். இந்த பெயர்தாங்கி உலமா தமது நோக்கங்களை அடைவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இழிவு ஏற்படத்தக்க சொற்களைக் கூறியுள்ளார்கள் என்ற அநீதியின் உச்சகட்டமான ஒரு பழியைப் போடுகிறார்கள். வாய்ப்பு கிடைக்கும் இடங்களில் எல்லாம் ஜமாஅத் மக்கள் மீதும், அஹ்மதிகள் (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட பெரியவராகக் கருதுகிறார்கள் என்ற இதுபோன்ற பழியைக் கூறி வருகிறார்கள். நல்லியல்பு கொண்ட மக்கள் எப்போதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களைப் படிக்கும் வாய்ப்பு பெற்றால் அல்லது அவர்களின் மேற்கோளைக் கேட்டால் இந்த பெயர்தாங்கிகளும் குழப்பவாதிகளுமாகிய ஆலிம்கள் குழப்பம் ஏற்படுத்துவதற்காகவே இந்தப் பழியைப் போடுகிறார்கள் என்று கூறி விடுவர்.

இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை எடுத்து வைப்பேன். அவை அன்னாரது நூல்களில் உள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யா எழுதிய காலத்திலிருந்து, தமது மறைவுக்கு சற்று முன்னர் எழுதிய நூல் வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அந்தஸ்து மற்றும் பெருமை குறித்து எழுதியுள்ளவற்றை எடுத்து வைப்பேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யாவின் 4 தொகுதிகளை 1880 –லிருந்து 1884 ஆம் ஆண்டு வரை எழுதியுள்ளார்கள். அவை ரூஹானி கஸாயினின் முதல் தொகுதியில் வைக்கப்பட்டுள்ளது. அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

‘‘இப்போது வானத்தின் கீழ் ஒரேயொரு நபி மட்டுமே இருக்கிறார்கள். ஒரேயொரு வேதம் மட்டுமே உள்ளது. ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களை விடவும் உயரிய மேன்மையானவரும், எல்லா ரஸூல்மார்களை விடவும் முழுமையையும் நிறைவையும் பொருந்தியவரும், காத்தமுல் அன்பியாவும், மனிதர்களில் சிறந்தவரும் ஆவார்கள். அவர்களைப் பின்பற்றுவதன் மூலம் இறைவன் கிடைக்கிறான்; இருளின் திரை விலகுகிறது. இவ்வுலகில் உண்மை ஈடேற்றத்தின் அறிகுறிகள் தென்படத் தொடங்குகின்றன.’’

திருக்குர்ஆன், உண்மையான முழுமையான நேர்வழி மற்றும் தாக்கங்கள் அடங்கியதாகும். அதன் மூலமே உண்மையான அறிவும் ஞானமும் கிடைக்கிறது. மனித மாசுகளிலிருந்து உள்ளம் தூய்மை அடைகிறது. மனிதன் அறியாமை, கவனமின்மை, ஐயம் ஆகிய திரைகளிலிருந்து விடுபட்டு நிச்சய உறுதியின் அந்தஸ்தை அடைகிறான்.

பிறகு பராஹீனே அஹ்மதிய்யாவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘இந்த எளியவனும் அந்த மகத்தான நபியின் எளிய தொண்டர்களுள் ஒருவனாவேன். அவர் எல்லா தூதர்களின் தலைவரும் ஆவார்கள்.’’

பிறகு 1886 –ல் அவர்களது நூல் சஷ்மயே சஷ்மா ஆரியாவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

‘‘ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களுடைய அகத்தூய்மை, உள்ளத்தின் விரிவு, நிச்சய உறுதி, உண்மை, தூய்மை, தவக்குல், பற்று, விசுவாசம் ஆகியவை எல்லா நபிமார்களை விடவும் அதிகமாகவும் உயர்வானதாகவும் நிறைவானதாகவும் இருந்ததால் வல்லமைமிக்க இறைவன் முழுமையான திக்ர் என்ற சிறப்பின் மூலம் எல்லாரையும் விட நறுமணம் கமழச் செய்தான். எல்லாரையும் விட உயரிய அந்தஸ்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெற்றார்கள். அவர்களது நெஞ்சமும் உள்ளமும் முன்னவர்கள் பின்னவர்கள் எல்லாரையும் விடவும், விசாலமாகவும், தூய்மையாகவும், அப்பழுக்கற்றதாகவும், ஒளிமயமாகவும் விளங்கியது. முன்னவர் பின்னவர் அனைவரை விடவும் இறைவனின் பண்பினைக் காட்டும் மிக உயர்தரமிக்க கண்ணாடியாக விளங்கும் நிறைவான இறை வஹியைப் பெறும் தகுதி பெற்றவர்கள் ஆனார்கள்.’’

பிறகு 1891 –ல் தவ்ஸீஹே மராம் என்ற தமது நூலில் இறை வஹியின் மிக உயரிய கம்பீரம் குறித்து குறிப்பிட்ட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இந்தத் தகுதி உலகில் ஒரேயொரு மனிதனுக்கு தான் கிடைத்தது. உயரிய கம்பீரமான இறை வஹியினைப் பெறும் தகுதி உலகில் ஒரேயொரு மனிதனுக்கு தான் கிடைத்தது. அவர் முழுமையான மனிதர் ஆவார். அவரிடம் எல்லா மனிதமும் முழுமை அடைந்தது. மனிதத் தன்மையின் எல்லா சாத்தியங்களும் அவரிடம் முழுமை அடைந்தன. மனிதனுக்கு எவ்வளவு ஆற்றல்களும் சக்திகளும் கிடைக்க முடியுமோ அது அவர்களிடம் முழுமை அடைந்திருந்தது. உண்மையில் அவர் இறை படைப்பின் உயரிய கடைசி புள்ளி ஆவார். அதாவது இறைவன் உருவாக்கிய படைப்பினங்களில் உச்சகட்ட எல்லையில் இருப்பவர்கள் ஆவார்.'' எல்லா பதவிகளிலும் உயரிய பதவியில் இருப்பவர்கள் ஆவார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இறை ஞானம் என்ற கையானது தனது படைப்பினங்களுள் உயர்விலும் உயர்வானதும், படைப்பினங்களைத் தொடங்கியதிலிருந்து மிக உயர்ந்த எல்லையை அடைந்ததுமான அப்புள்ளியில் சென்று சேர்ந்தது. அதன் பெயரை இன்னொரு வார்த்தையில் கூறுவதாயின் முஹம்மது (ஸல்) அவர்கள் ஆவார்கள். அதன் பொருள் மிக மிக அதிமாக புகழப்பட்டது – உயர்வின் நிறைவின் வெளிப்பாடு – இயல்பிற்கேற்ப எவரிடம் எல்லா உயர்வுகளும் நிறைவாக காணப்படுமோ அவரிடம் வெளிப்படையான முறையிலும் அந்த உயரிய தகுதிகள் வழங்கப்பட்டன. அவர் அடைந்த உயரிய மேலான அந்த நேசத்தை நானோ (அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது –அலை–) அல்லது அந்த மஸீஹோ அடைய முடியாது.''

பிறகு 1982–1893 –க்கு இடையில் எழுதப்பட்ட நூல் – ரூஹானி கஸாயின் தொகுதி 5 –ல் உள்ளது. ஆயினயே கமாலாத்தே இஸ்லாமின் இரு பகுதிகள் – உருது மற்றும் அரபியில் உள்ளது. இதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தகுதி குறித்து கூறுகின்றார்கள்: ''அவர் உயர் தகுதி வாய்ந்த ஒளி ஆவார்கள். அது மனிதனுக்கு தரப்பட்டது. அதாவது முழுமையான மனிதனுக்கு தரப்பட்டது. அவ்வொளி மலக்குகளிடமும் இல்லை. நட்சத்திரங்களிலும் இல்லை. சந்திரனிலும் இல்லை. சூரியனிலும் இல்லை. பூமியின் கடல்கள், நதிகளிலும் இருந்ததில்லை. மாணிக்கம், மரகதம், நீலமணி, முத்துக்களிலும் இருந்ததில்லை. சுருக்கமாக, எது வானம் மற்றும் பூமியில் எவரிடமும் இருந்ததில்லையோ அது மனிதனிடம் இருந்தது. அதாவது முழுமையான மனிதனிடம், முழுமையான, நிறைவான, உயர்வான, அம்மனிதனாகிய நமது எஜமானரும் தலைவரும், நபிமார்களின் தலைவரும், உயிருள்ளவர்களின் தலைவருமாகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடம் இருந்தது.''

பிறகு 1894 –ல் ரூஹானி கஸாயின் 8 –வது தொகுதியிலேயே இத்மாமே ஹிஜ்ஜா என்ற நூலில் எழுதப்பட்டது:

''அந்த மனிதன் எல்லாரையும் விட முழுமையானவராக இருந்தார். முழுமையான நபியாக இருந்தார்கள். முழுமையான பரக்கத்துகளுடன் வந்தார். அவரால் ஆன்மீக எழுப்புதல் மற்றும் கியாமத் வெளிப்பட்டது. மரித்துப்போன ஒரு உலகமே உயிர் பெற்றது. முபாரக் நபி ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா, இமாமுல் அஸ்ஃபியா காத்தமுல் முர்ஸலீன் ஃபகருன்னபிய்யீன் ஜனாப் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மூலமாக உயிர் பெற்றது. அன்பிற்குரிய இறைவா! இந்த அன்பிற்குரிய நபி மீது உலகம் தொடங்கியதிலிருந்து யாருக்குமே வழங்காத தரூதை அனுப்புவாயாக.''

பிறகு 1897 –ல் சிராஜே முனீர் என்ற நூலில் ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''நாம் நீதியின் கண் கொண்டு பார்க்கும் போது நுபுவ்வத்தின் தொடரில் மிக உயரிய தகுதி வாய்ந்த மேன்மைமிக்க நபி மிக உயர் தகுதி வாய்ந்த அன்பு நபி ஒருவர் தான் என்று அறிகிறோம். அவரே நபிமார்களின் தலைவர். ரஸூல்மார்களின் பெருமிதம். எல்லா ரஸூல்மார்களின் கிரீடம். அவரது பெயர் முஹம்மது முஸ்தஃபா அஹ்மமே முஜ்தபா (ஸல்) ஆகும். அவர்களது நிழலின் கீழ் 10 நாள் செல்வதன் மூலம் கிடைக்கின்ற ஒளி இதற்கு முன்னர் 1000 வருடம் சென்றாலும் கிடைக்காததாக இருந்தது.''

பிறகு 1898 –ல் அன்னாரது கிதாபுல் பரிய்யா என்ற நூலில் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

''நமது நபி (ஸல்) அவர்களுடைய அடையாளம் மற்றும் அற்புதம் இரு வகைப்படும். ஒன்று, அன்னாரின் கைகளின் மூலம் வெளிப்பட்டது. அன்னாரின் செயல்கள் மற்றும் துஆக்கள் மூலம் வெளிப்பட்டது. அத்தகைய அற்புதங்களை எண்ணினால் மூவாயிரம் ஆகும். இரண்டாவது அற்புதம் அன்னாரின் உம்மத்தின் மூலம் எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அத்தகைய அடையாளங்களின் எண்ணிக்கை இலட்சத்தை தொட்டு விட்டது. அத்தகைய ஒரு அடையாளமேனும் வெளிப்படாத ஒரு நூற்றாண்டும் அழியவில்லை. இந்த வகையில் இக்காலத்தில் இந்த எளியவன் இந்த அடையாளத்தைக் காட்டுகிறான். இறைவன் அடையாளத்தைக் காட்டுகிறான். இந்தத் தொடர் இந்த எல்லா அடையாளங்களை விட்டு ஒரு காலத்திலும் துண்டிக்கப்படவில்லை. நிச்சயமாக நாம் அறிவோம். இறைவனது அனைவரின் சிறந்த நபி அனைவரினும் அன்பு மிக்க நபி ஜனாபே முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களேயாவர். மற்ற நபிமார்களின் உம்மத்துகள் ஓர் இருளில் இருக்கிறார்கள். கடந்த கால கதைகள் மட்டுமே அவர்களிடன உள்ளன. ஆனால் இந்த உம்மத்தோ எப்போதும் இறைவனது புத்தம்புது அடையாளங்களைப் பெற்று வந்தது. இறைவன் ஒவ்வொரு காலத்திலும் அவரது முழுமையான தூய அடையாளத்தைக் காட்டுவதற்கு எவரையாவது அனுப்புகிறான். இக்காலத்தில் மஸீஹே மவ்வூது என்ற பெயரில் என்னை அனுப்பியுள்ளன்.

பிறகு 1900 –ல் ரிஸாலா அர்பயீன் எண். 1 –ல் இது ரூஹானி கஸாயின் உடைய 17 –வது தொகுதியில் உள்ளது. அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''நான் உண்மையாகவே கூறுகிறேன். இப்பூமியில் ஒரேயொரு முழுமை பெற்ற மனிதனே வாழ்ந்து சென்றுள்ளார். அவரது முன்னறிவிப்புகளும், துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதும், பிற அற்புதங்கள் வெளிப்படுவதும் எத்தகைய விஷயமாக இருக்கிறது எனில் இதுவரை அவரது உண்மையான சீடர்கள் மூலம் அவை நதி போன்று வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. அவரின்றி

வேறு எவர் இத்தனை ஆற்றல்களைக் கொண்டுள்ளார். இஸ்லாமிய பரக்கத்துகளுக்கு எதிரில் போட்டி போடுபவர் யார்? அவர் எந்த நாட்டில் இருக்கிறார்?''

பிறகு 1902 –ல் தமது கிஷ்தி நூஹ் என்ற நூலில் கூறுகின்றார்கள்:

''மனித குலத்தில் இப்பூமியில் திருக்குர்ஆனை தவிர வேறு வேதம் இல்லை. ஆதமுடைய மக்களுக்கு முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைத் தவிர வேறு பரிந்துரையாளர் இல்லை. எனவே நீங்கள் முயற்சி செய்யுங்கள். உண்மையான அன்பினை அந்த கம்பீரமிக்க நபியின் மீது வையுங்கள். வேறு எவருக்கும் அவரை விட மேன்மையை வழங்காதீர்கள். அதன் மூலமே நீங்கள் வானத்தில் ஈடேற்றம் பெற்றவர் என்று எழுதப்படுவீர்கள்.

பிறகு 1902 –ல் நஸீமே தஃவத் என்ற நூலில் கூறுகின்றார்கள்:

''அந்த முழுமையான உண்மையான ஆற்றல்மிக்க இறைவனுக்கு நமது உயிரின் ஒவ்வோர் அணுவும் ஸஜ்தா செய்கிறது. அவனது கையின் மூலம் படைப்பினத்தின் ஒவ்வொரு அணுவும், தமது எல்லா ஆற்றல்களுடன் வெளிப்பட்டன. அவனது இருப்பின் மூலமே ஒவ்வொன்றின் நிலைப்பும் உள்ளது. எந்த ஒன்றும் அவனது அறிவுக்கு அப்பாற்பட்டதல்ல. அவனது கவனத்தை விட்டோ படைப்பை விட்டோ வெளியில் இல்லை. ஆயிரக்கணக்கான ஸலவாத்துகள், ரஹ்மத்துகள், பரக்கத்துகள் அந்த தூய நபி முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது உண்டாகட்டும். அவர் மூலமே நாம் அந்த உயிருள்ள இறைவனை பெற்றோம். அதாவது விளக்கப்பட்ட இறைவனது எல்லா பண்புகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமே பெற்றோம். அவனது இருப்புக்கு அவனுடன் உரையாடி அன்னார் அடையாளம் தந்தார்கள்.''

1903 –ல் லெக்சர் ஸியால்கோட்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

''சுருக்கமாக இந்த எல்லா வழிகேடுகளும், மார்க்கங்களில் உருவாகி விட்டன. அவற்றுள் சில கூறவும் தகுதியற்றவை. மனிதத் தூய்மைக்கு எதிரானவை. இந்த எல்லா அடையாளங்களும் இஸ்லாத்திற்காக தேவை உடையனவாக இருந்தன. பழைய மதங்களின் வழிகேடுகள் உருவாகக் காரணம் இஸ்லாம் வர வேண்டியிருந்தது. ஓர்அறிவுள்ளவர் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். இஸ்லாத்திற்கு சிறிது முன்பே எல்லா மதங்களும் தடம்புரண்டு போயின. ஆன்மீகத்தை இழந்து விட்டன. நமது நபி (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதற்காக ஒரு புதிய ஆதமாக இருந்தார்கள். அன்னார் காணாமற்போன உண்மையை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தார்கள். இந்த பெருமையில் நமது நபி (ஸல்) அவர்களுடன் வேறு எந்த நபியும் சமமில்லை. அன்னார் இவ்வுலகை இருட்டாகக் கண்டார்கள். அன்னாரின் வெளிப்பாட்டின் மூலம் அந்த இருள் ஒளியாக மாறியது.''

1905 –ல் பராஹீனே அஹ்மதிய்யாவின் 5 –வது தொகுதியாகிய தமது நூலில் கூறுகின்றார்கள்:

''ஆயிரக்கணக்கான நன்றிகள் அந்த இறைவனுக்கே! அவன் எத்தகைய மார்க்கத்தை வழங்கினான்? அது இறைவனை அறியவும் உணரவும் ஊடகமாக உள்ளது. எக்காலத்திலும் அதற்கு ஒப்பானது இருந்ததில்லை. ஆயிரக்கணக்கான ஸலவாத்துகள் அந்த அப்பழுக்கற்ற நபியின் மீது உண்டாகட்டும்! அவர்களது வஸீலா மூலமாகவே நாம் இந்த தூய மார்க்கத்தில் இணைந்தோம். ஆயிரக்கணக்கான ரஹ்மத்துகள் அந்த கண்ணியமிக்க நபியின் சஹாபிகள் மீதும் உண்டாகட்டும்! அவர்கள் தமது இரத்தத்தின் மூலம் இத்தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சினர்.''

பிறகு 1907 –ல் அன்னாரின் ஹகீகத்துல் வஹியில் கூறுகின்றார்கள்:

''ஆகவே, நான் எப்போதும் வியப்புடன் பார்க்கிறேன். அந்த அரபி நபி. அவரது பெயர் முஹம்மது. ஆயிரக்கணக்கான ஸலாத்தும் ஸலாமும் அவர்கள் மீது உண்டாகட்டும்! அவர் எத்தகைய உயர் தகுதி வாய்ந்த நபியாக இருக்கிறார்கள். அவர்களின் உயர் தகுதியின் இறுதி எல்லையை அடைய இயலாது. அன்னாரின் தூய தாக்கத்தை மதிப்பிடுவது மனித வேலையல்ல. அறியப்பட வேண்டிய அளவுக்கு அன்னார் அறியப்படவில்லை என்பதுதான் பரிதாபம். உலகிலிருந்து ஏகத்துவம் மறைந்து போயிருந்தது. அந்த வீரர்தான் அதனை உலகிற்கு மீட்டுத் தந்தார். அவருக்கு இறைவன் மீது அளவு கடந்த நேசம் இருந்தது. அதில் அன்னாரது உயிர் கரைந்தது. அன்னாரது உள்ளத்தின் இரகசியம் அறிந்த இறைவனின் எல்லா நபிமார்கள், முன்னவர் பின்னவர் எல்லார் மீதும் மேன்மையை வழங்கினான். அவரது வாழ்நாளிலேயே அவர்களது விருப்பத்தை நிறைவேற்றினான். அவரே ஒவ்வொரு அருளின் தலையூற்று ஆவார். அவரை ஒப்புக் கொள்ளாமல் தமக்கு ஏதேனும் மேன்மை இருப்பதாக எவரேனும் வாதித்தால் அவர் மனிதனல்ல. ஷய்த்தானின் சந்ததியாவார்.''

பிறகு 1908 –ல் தனது நூலான சஷ்மயே மஃரிபத்தில் கூறுகின்றார்கள்:

''உலகில் கோடிக்கணக்கான தூய இயல்புள்ளவர்கள் வாழ்ந்து சென்றுள்ளார்கள். இனியும் தோன்றுவார்கள். ஆனால் அவர்கள் எல்லாரினும் மேலானவர் சிறந்தவர், உயர்ந்தவராக நாம் அந்த இறை மனிதனையே கண்டோம். அவர்கள் முஹம்மது (ஸல்) அலைஹி வஆலிஹி வஸல்லம் ஆவார்கள். மேலும் யாரைப் பற்றி திருக்குர்ஆனில் விரிவாக கூறப்படவில்லையோ அத்தகைய பெரியவர்களை விடுங்கள். திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்ட நபிமார்களை பற்றி மட்டுமே நாம் நமது கருத்துகளை எடுத்து வைக்கிறோம். ஹஸ்ரத் மூஸா, ஹஸ்ரத் தாவூது, ஹஸ்ரத் ஈஸா அலைஹிமுஸ்ஸலாம் மற்றும் பிற நபிமார்கள் இருக்கின்றனர். எனவே, நாம் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறோம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உலகில் வராவிட்டால் திருக்குர்ஆன் இறங்கி இருக்காவிட்டால் நாம் நேரில் கண்ட அந்த பரக்கத்துகளை நாம் பார்த்திராவிட்டால் அந்த கடந்த கால எல்லா நபிமார்களின் உண்மையும் நமக்கு ஐயத்திற்குரியதாகவே ஆகியிருக்கும்.

சஷ்மயே மஃரிபத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நினைவில் கொள்ள வேண்டும். இந்த கண்ணியம், இந்த கம்பீரம் இந்த ஆயிரக்கணக்கான பரக்காத்தே ரப்பானி ஒரு

பொய்யருக்கும் கிடைக்குமா? நமக்கு பெருமை உண்டு. எந்த நபியின் பாதங்களை நாம் பற்றியுள்ளோமோ அவர் மீது இறைவனது பெரும் அருள் உள்ளது. அவர் இறைவன் இல்லை தான். ஆனால் நாம் அவர் மூலமாக இறைவனை பார்த்து விட்டோம். அவரிடமிருந்து நமக்கு கிடைத்த மார்க்கம் இறை ஆற்றலின் கண்ணாடியாகும். இந்த மார்க்கம் இல்லையெனில் நுபுவ்வத் என்றால் என்னவென்று புரிவது சாத்தியமற்றது. அற்புதங்களுள் சாத்தியமானவை உள்ளனவா? அவை என்ன இயற்கைச் சட்டத்தில் உள்ளவையா? பாருங்கள். அந்த நபியின் நிரந்தரமான அருள் அதற்கு தீர்வு வழங்கியது. அவர் மூலமாகவே நாம் மற்ற மார்க்கங்கள் போன்று கதை சொல்பவர்களாக இல்லாமல் ஆனோம். மாறாக, இறைவனின் ஒளி, இறைவனின் வானத்து உதவிகள் நமக்கு கிடைத்தன. அதற்கு நன்றி செலுத்துவதற்கு நாம் என்ன பொருட்டு? நாம் மிகவும் எளியவர்கள் ஆவாம். இறைவன் மற்றவர்களை பொருத்தவரை மறைந்திருப்பவன். அவனது மறைமுகமான ஆற்றல் மற்றவர் மீது ஒளிந்திருக்கின்றது. அவன் கம்பீரங்கள் உள்ள இறைவன். அவன் தனது இந்த நபி மூலமாக மட்டுமே நம்மீது வெளிப்பட்டு விட்டான்.

சஷ்மயே மஃரிபத்திலேயே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தகுதி அந்தஸ்து மற்றும் அவர்களின் தொடர் அருள் பற்றி கூறுகின்றார்கள்:

பிறகு நமது சான்றோராகிய அந்நபி இவ்வுலகில் தோன்றினார். பெரும் புரட்சி உலகில் ஏற்பட்டது. சில நாட்களிலேயே அரேபிய தீபகற்பம் சிலைவணக்கத்தை விடுத்து தவ்ஹீதால் நிறைந்தது. இது தவிர நமது எஜமானரும் தலைவருமாகிய நபி (ஸல்) அவர்களுக்கு எந்த அளவுக்கு அடையாளங்கள் வெளிப்பட்டனவோ அது அக்காலம் வரை நின்றுவிடவும் இல்லை. கியாமத் வரை அத்தொடர் தொடர்கிறது. முந்தைய காலத்தில் எந்த நபிமார்கள் வந்தார்களோ அவர்கள் எந்த நபியின் உம்மத் என்றும் அழைக்கப்படவில்லை. எவர் அவரது மார்க்கத்திற்கு உதவி செய்கிறாரோ உண்மை என்று கூறுகிறாரோ அத்தகைய மனிதர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தி நபி ஆகிறார். இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பான பெருமை ஆகும். இந்த பொருளில் அன்னார் காத்தமுல் அன்பியா ஆவார்கள். நுபுவ்வத்தின் எல்லா முழுமைகளும் அவரிடம் முடிவடைகின்றன. இரண்டாவது புதிய ஷரீஅத்தை கொண்டு வரும் நபி இல்லை. அவர்களது உம்மத்திற்கு வெளியில் இருந்து எந்த நபியும் இல்லை. இறை அறிவிப்பு என்ற சிறப்பு ஒவ்வொருவருக்கும் கிடைக்கிறது. அது அவரின் மூலமாக கிடைக்கிறது. அதனை பெறுபவர் உம்மத்தி என்று அழைக்கப்படுகிறார். அவர் சுதந்திரமான நபியல்ல. இந்த அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து அறிவிப்பு பெற்று தாம் உம்மத்தி நபியாக இருப்பதாக அறிவித்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்று படைப்பினங்கள் திரும்புதல் எந்த அளவுக்கு அன்னாரின் பக்கம் இருக்கிறது எனில் குறைந்தபட்சம் 20 கோடி பேர் அவர்களின் அடிமையாக இருக்கிறார்கள். அன்னார் கூறுகின்றன இந்த தொகை அவர்களின் காலத்து எண்ணிக்கையாகும். உலகத்தினை வெல்லக்கூடியவர்கள் அன்னாரின் பாதத்தின் கீழ் விழுகிறார்கள். இக்காலத்தில் முஸ்லிம் அரசர்களும் கூட தாழ்மையான சீடன் போன்று அன்னாரின் சன்னிதானத்தில் தம்மை கருதுகின்றனர். அன்னார் பெயர் சொல்லும் போது அரியணையிலிருந்து தமது கிரீடத்தை கீழிறக்குகின்றனர்.

இந்த அன்னாரின் தகுதிகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எடுத்து வைக்கிறார்கள். முழு உலகின் முஸ்லிம்களும் அன்னாரின் அடிமையாக இருப்பதை பெருமையாகக் கருதுகின்றனர். இதுவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தகுதியும் அந்தஸ்தும் ஆகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கருதினார்கள். உலகிற்கும் கூறினார்கள். தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் அந்த புரிதலை வழங்கினார்கள். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களாக இல்லையெனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அழகு மேன்மையின் ஆழத்தை ஒருபோதும் அறிந்திருக்க மாட்டோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடக்கத்தில் வேறு மாதிரி பேசினார்கள். பிறகு தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார்கள். சுயநலத்திற்காக நவூதுபில்லாஹ் அவ்வாறு செய்யத் தொடங்கினார்கள் என்று எதிரிகள் கூறுகிறார்கள்.

நான் 1880 –லிருந்து அன்னாரின் எல்லா நூல்களையும் 1908 வரை உள்ளவற்றை அது அன்னாரின் மரணமடைந்த வருடம் எடுத்து வைத்துள்ளேன். இங்கு எந்த இடத்திலும் ஓரிடத்தில் கூட அன்னார் விஷயத்தை தெளிவுபடக் கூறாமல் விடவில்லை. எல்லா இடத்திலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய தகுதியையும் அந்தஸ்தையும் முன்னதை விட அதிகமாகவே கூறியுள்ளார்கள். தம்மை அன்னார் நபி என்றும் கூறியுள்ளார்கள். அதுவும் அன்னாரின் அடிமைத்தனத்தின் கீழ் தான். அல்லாஹ் இந்த சுயநலமிகளின் நோக்கங்களிலிருந்து இந்த உம்மத்தை பாதுகாப்பானாக. அந்த ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொள்வதன் மூலமே முஹம்மதிய உம்மத்தின் கண்ணியமும் மகிமையும் மீண்டும் நிலைபெற முடியும்.

அல்லாஹ் நம்மையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நூல்களையும் வழிகாட்டல்களையும் படிக்கவும் புரியவும் வாய்ப்பளிப்பானாக. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாகவே நமக்கு அருள்கள் வந்தடைகின்றன என்பதை புரியும் திறன் வழங்குவானாக. வாய்ப்பும் வழங்குவானாக.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 18.12.2015
Tamil Translation : Muallim. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516